## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகன் | தொழில் | : அரசு ஓட்டுனர்-ஓய்வு |
| தந்தை பெயர் | : ஜோதிலிங்கம் | சமயம் | : |
| கிராமம் | : தேவனாம்பேட்டை | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 60 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.முரளி HC 113 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் தேவனாம்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். செஞ்சி அரசு போக்குவரத்து கழக பணி மணையில் அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரி ஏழுமலை என்னுடன் அரசு பேருந்து ஓட்டுனர்.

2. கடந்த 29.08.2017 தேதியன்று செஞ்சி அரசு பணிமணையில் TN32 -ல் 2547 என்ற அரசு பேருந்தை அதன் வண்டி எண்.1 ஏ பேருந்தை எடுத்துகொண்டு செஞ்சியில் இருந்து மழவந்தாங்களை நோக்கி ஓட்டி சென்றேன். அப்போது பெருங்காப்பூர் சானிக்குளம் காடு அருகே சென்றபோது எதிரே வந்த வண்டி எண்.2718 என்ற அரசு பேருந்து இடது பக்கமாக ஓட்டிச்சென்ற எனது பேருந்து மீது மோதியது. அந்த பேருந்தை ஆஜர் எதிரிதான் ஓட்டி வந்தார். எனது பேருந்தில் பயணித்தவர்களில் 10, 15 நபர்களுக்கு சிறு சிறு காயம் ஏற்பட்டது. எதிரே வந்து மோதிய ஆஜர் எதிரி ஓட்டிய பேருந்தில் பயணித்தவர்களில் பயணியர்களுக்கும் சிறு சிறு காயம் ஏற்பட்டது. எனக்கு இடுப்பு, கழுத்து பகுதிகளில் அடிபட்டு காயம் ஏற்பட்டது. கண்ணாடி துகள்கள் என்மீது தெரித்து விழுந்தது. நான் ஓட்டிச்சென்ற அரசு பேருந்து இடதுபுறமாக சென்றது. எதிரே வந்த அரசு பேருந்துதான் வேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது. காயம்பட்டவர்கள் அரசு மருத்துவமணையில் சிகிச்சை பெற்றார்கள். ஒரு சிலர் சென்று விட்டார்கள். நானும், ஆஜர் எதிரியும் ஆம்புலன்ஸ் மூலமாக செஞ்சி அரசு மருத்துவணைக்கு சென்று முதலுதவி பெற்றோம். பிறகு இருவரும் ஒரே ஆம்புலன்ஸில்

ஒரே மருத்துவணைக்கு சிகிச்சைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

வண்டி வாகன எண்ணை கையில் குறித்து கொண்டு வந்தேனா என்றால் வந்தேன். கையில் குறிப்பெடுத்ததை ஞாபகம் வைத்துக்கொண்டு அதன்பேரில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. ஞாபகத்திற்காக வண்டி எண் கையில் குறித்து வைத்ததாக சாட்சி கூறுகிறார். விபத்து நடந்த இடத்தில் அதிவேகத்தில் வாகனம் ஓட்டிச்செல்ல முடியாது என்றால் சரிதான். என் வாகனத்தை பிரேக் அடித்து நிறுத்தினேனா என்றால் இடது புற மண் தரையில் நிறுத்தினேன். ரோட்டின் சாலை ஓரத்தில் மரம், செடி உள்ளதா என்றால் உள்ளது. எதிரி ஓட்டி வந்த பேருந்து டவுன் பஸ் என்றால் சரிதான். டவுன் பஸ்க்கும், புறநகரப்பேருந்துக்கும் வாகனம் ஓட்டிச்செல்லும் வேகத்திறன் மாறுபடும் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக புகார் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் கொடுத்தது யார் என்றால் தெரியவில்லை. பயணித்த ஒருவர் கொடுத்ததாக தெரியும். மோதாமல் இருப்பதற்காக இருவரும் பிரேக் பிடித்தபோது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் இடதுபுறமாக சென்றபோது மோதியதாக சாட்சி கூறுகிறார். விபத்தில் வாகனத்திற்கு அதிக சேதாரம் ஏற்பட்டதா என்றால் சேதாரம் ஏற்பட்டது. எனக்கு வெளிப்புற காயங்கள் இருந்ததா என்றால் கண்ணாடி முகத்தில் பட்டு கிழிந்தது. தையல் போடவில்லை. ஆஜர் எதிரியும் காயம் பட்டு சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற பேருந்தை மோதிய பேருந்து 30 மீ இடைவெளி தூரத்தில் நின்றதா என்றால் நான் ஓட்டிச்சென்ற பேருந்தை மோதி சுமார் 10 மீ தூரம் சென்று நின்றது. தார்ரோடு எத்தனை மீட்டர் என்றால் 35 முதல் 45 அடி அகலத்திற்குள் தான் தார்ரோடு இருக்கும். நான் கூறுவது போல் வேகமாக வந்து வாகனம் மோதியிருந்தால் இரண்டு வாகனமும் மோதிய நிலையிலேயே ரோட்டிலேயே நின்றிருக்கும் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் மருத்துவமணையில் வந்து விசாரித்தார்கள். விசாரித்த போலிசார் தெரியுமா என்றால் அவரது பெயர், பதவி விவரம் தெரியவில்லை. கவனக்குறைவாக நான் வாகனத்தை ஓட்டிச்சென்றதனால் தான் காயம்பட்ட பின்னரும் கூட நான் எதிரிக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னக்குழந்தை | தொழில் | : கூலி |
| கணவர் பெயர் | : கோதண்டபாணி | சமயம் | : |
| கிராமம் | : ஆத்திப்பட்டு | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 55 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.முரளி HC 113 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் ஆத்திப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 8 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் 8 நெம்பர் டவுன் பஸ்ஸில் செஞ்சி வருவதற்காக ஆத்திப்பட்டில் ஏறிக்கொண்டு வந்தேன். செஞ்சி காட்டு அருகே டப் என்று சத்தம் கேட்டது. பார்த்ததில் 2 பஸ்சும் மோதிக்கொண்டது. அதில் வலது தோள்பட்டையில் காயம் பட்டது. என்னுடன் 3 பேருக்கு காயம் பட்டது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். நான் சென்ற பேருந்தை ஆஜர் எதிரிதான் ஓட்டி வந்தவர். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

யாருடைய கவனக்குறைவால் பேருந்து மோதிக்கொண்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. விபத்து நடந்த பிறகு இரண்டு பேருந்தும் மோதி தனித்தனியாக நின்றது என்றால் தெரியவில்லை. எனக்கு மயக்கம் ஏற்பட்டது. போலிசார் விபத்து நடந்த பிறகு என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தமிழரசி | தொழில் | : கூலி |
| கணவர் பெயர் | : முனுசாமி | சமயம் | : |
| கிராமம் | : ஆத்திப்பட்டு | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 60 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.முரளி HC 113 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் ஆத்திப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2017 ம் வரும், தேதி மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் ஆத்திப்பட்டில் இருந்து 8 நெம்பர் டவுன் பஸ்ஸில் செஞ்சி வருவதற்காக சென்றேன். செஞ்சி பெருங்காப்பூர் காட்டு அருகே மெதுவாக சென்ற எங்கள் பேருந்தில் டப் என்று சத்தம் கேட்டது. பார்த்ததில் 2 பஸ்சும் மோதிக்கொண்டது. நான் பஸ்ஸில் நடு சென்டரில் உட்கார்ந்து இருந்தேன். நான் சென்ற பேருந்தை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான். விபத்தில் முகத்தில் கண்ணாடி பட்டு காயமானது. வலது கையிலும் அடிபட்டது. நான் சென்ற பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் ஆஜர் எதிரிக்கும் ரத்த காயம் ஏற்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**:

நான் பயணித்த பேருந்து மெதுவாகத்தான் சென்றது என்றால் சரிதான். எதிரே வந்த பேருந்து மோதியதா என்றால் டப் என்று சத்தம் கேட்டது. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் பயணித்த பேருந்து மெதுவாக சென்றதாகவும் டப் என்று சத்தம் கேட்டதுதான் தெரியும் என்றுதான் போலிசாரிடமும் சொன்னேனா என்றால் ஆமாம். நான் பயணித்த பேருந்து மெதுவாக சென்றதாக தான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 320/2022**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மல்லிகா | தொழில் | : கூலி |
| கணவர் பெயர் | : கிருஷ்ணன் | சமயம் | : |
| கிராமம் | : ஆத்திப்பட்டு | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 60 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.முரளி HC 113 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் ஆத்திப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். வருடம், தேதி மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் ஆத்திப்பட்டில் இருந்து 8 நெம்பர் டவுன் பஸ்ஸில் செஞ்சிக்கு மருத்துவரை பார்க்க சென்றேன். செஞ்சி பெருங்காப்பூர் காட்டு அருகே டமால் என்று சத்தம் கேட்டது. எனக்கு முகம், கைகளில் அடிபட்டது. மயக்கம் அடைந்தேன். மருத்துவணைக்கு சென்றேன். அவ்வளவுதான் தெரியும். டிரைவரை நான் பார்க்கவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

அடிபட்ட நான் மருத்துவணைக்கு சென்றேனா என்றால் சென்றேன். போலிசார் என்னை மருத்தவமணையில் விசாரித்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**